# Telephone conversation between PM and President of Indonesia

April 28, 2020

## பிரதம மந்திரி மற்றும் இந்தோனேசிய ஜனாதிபதி உடனான தொலைபேசி உரையாடல்

ஏப்ரல் 28,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி இந்தோனேசியா ஜனாதிபதி அவரது மேன்மை ஜோகோ விடடோவுடன் இன்று தொலைபேசியில் பேசினார்.

இரு தலைவர்களும் Covid-19 தொற்றுநோய் பிராந்தியத்திலும் உலகளவிலும் ஏற்படுத்திய பரவலைப் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டனர்.

இந்தோனேசியாவிற்கு மருந்து பொருட்கள் வழங்க இந்திய அரசு வழங்கிய வசதியை இந்தோனேசிய ஜனாதிபதி பாராட்டினார். மருத்துவ பொருட்கள் அல்லது இரு நாடுகளுக்கிடையில் வர்த்தகம் செய்யப்படும் பிற பொருட்களின் விநியோகத்தில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க இந்தியா தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என்று பிரதம மந்திரி அவருக்கு உறுதி அளித்தார்.

தத்தமது நாடுகளில் இருக்கும் பிரஜைகளின் பிரச்சனைகள் குறித்து தலைவர்கள் விவாதித்தனர்., இந்த விஷயத்தில் சாத்தியமான அனைத்து வசதிகளையும் உறுதிபடுத்த அவர்களின் அணிகள் தொடர்பில் இருக்கும் என்று ஒப்புக்கொண்டனர்.

இந்தியாவின் விரிவாக்கப்பட்ட சுற்றுப்புறத்தில் இந்தோனேசியா ஒரு முக்கியமான கடல் பங்காளியாகும் என்ற உண்மையை பிரதம மந்திரி அடிக்கோடிட்டு காட்டினார், மேலும் இரு தரப்பு உறவின் வலிமை இரு நாடுகளுக்கும் தொற்றுநோய்களை எதிர்த்துப் போராட உதவும்

அவர் புனித ரமலான் மாத வாழ்த்துக்களை அவரது மேன்மை ஜனாதிபதி விடடோ மற்றும் நட்புமிகுந்த இந்தோனேசிய மக்களுக்கும் தெரிவித்தார். .

**நியூ டெல்லி**
**ஏப்ரல் 28, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.